**செய்தி வெளியீடு எண்: 314** **நாள்: 09.05.2018**

**<u>கலை பண்பாட்டுத்துறை</u>**

**<u>தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றம்</u>**

மைய அரசின் மனிதவள மேம்பாட்டுத்துறையின் கீழ் செயல்படும் தேசிய சிறுவர் மன்றத்தின்(National Bal Bhavan) 1995–ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இம்மன்றத்தின் நோக்கங்களை மாநில அளவில் செயல்படுத்திடவும், ஐந்து வயது முதல் பதினாறு வயதுக்கு உட்பட்ட சிறார்களுக்கு பொதுக்கல்வியுடன் கலைக்கல்வி வழங்குவதை அடிப்படை பணியாகக் கொண்டு, கலைகளில் பயிற்சிகள் அளித்து, சிறார்களிடம் மறைந்து கிடக்கும் கலைத்திறமைகளை வெளிக்கொண்டு வருதல், சிறார்களின் திறமைகளை வெளிக்கொணர வாய்ப்புகள் வழங்கி அதன் மூலம் சிறார்களின் தனித்திறமையை கண்டுணரச் செய்தல், கலையால் அவர்களை நல்வழிபடுத்துதல் போன்றனவையாகும்.

ஏற்கெனவே, இத்தகைய நோக்கங்களை அடிப்படையாக கொண்டு, தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றம் 1979–ஆம் ஆண்டு சென்னையில் தொடங்கப்பட்டு, தற்போது மாநிலம் முழுவதும், 24 இடங்களில் மாவட்ட ஜவகர் சிறுவர் மன்றம் என்றும், 10 இடங்களில் விரிவாக்க மையங்கள் என்றும், 2 இடங்களில் ஊரக மையங்கள் என்றும், சென்னையில் 4 மையங்கள் என மொத்தம் 40 இடங்களில் மாவட்ட ஜவகர் சிறுவர் மன்றங்களாக செயல்பட்டு வருகிறது.

தற்போதுள்ள 40 ஜவகர் சிறுவர் மன்றங்களில், புதுதில்லி தேசிய சிறுவர் மன்றத்தின் (National Bal Bhavan) இணைவு பெற்று 21 ஜவகர் சிறுவர் மன்ற மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இம்மையங்களில் பயிற்சி பெறும் சிறார்களுக்கு முதலில் மாவட்ட அளவிலும் பிறகு மாநில அளவிலும் போட்டிகள் நடத்தி அதில் தேர்ச்சி பெற்றவர்கள் இறுதியாக **புதுதில்லியில் தேசிய அளவில் நடைபெறும் பாலஸ்ரீ விருதிற்கான போட்டியில்** ஆண்டுதோறும் பங்கு கொண்டு வருகிறார்கள்.

2016–ஆம் வருட பாலஸ்ரீ விருதிற்கான போட்டியில் பங்கு பெறுவதற்காக, மாவட்ட அளவில் 16.05.2017 அன்றும், மாநில அளவில் 29.07.2017 மற்றும் 30.07.2017 ஆகிய இரண்டு நாட்கள் சென்னை அரசு இசைக் கல்லூரியிலும் போட்டிகள் நடத்தி அதில் தேர்ச்சி பெற்றவர்களை, தேசிய அளவில் 22.04.2018 மற்றும் 23.04.2018 ஆகிய இரண்டு நாட்கள் புதுதில்லி தேசிய சிறுவர் மன்றத்தில் பாலஸ்ரீ விருதுக்காக நடைபெற்ற போட்டியில் தமிழ்நாட்டின் சார்பாக பங்குபெற்ற 31 மாணாக்கர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் தலா ரூ.5000/–க்கான வரைவோலைகளை தேசிய சிறுவர் மன்றம் வழங்கியுள்ளது. 31 மாணவர்களுக்கான சான்றிதழ்கள் மற்றும் ரூ.5,000/–க்கான நல்கை வரைவோலைகள் தமிழ் ஆட்சிமொழி, தமிழர் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் அவர்களால் (9.5.2018) இன்று சென்னை எழும்பூர், கலை பண்பாட்டு இயக்ககத்தில். கலை பண்பாட்டு இயக்கக ஆணையர் திரு.அ.இராமலிங்கம், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற விழாவில் வழங்கப்பட்டது.

**<u>கலை நிகழ்ச்சிகள் வழங்கிய தனியார் அமைப்புகளுக்கு நிதியுதவி வழங்குதல்</u>**

“நுண்கலைகளையும், நிகழ்த்துக் கலைகளையும் போற்றிப் பாதுகாத்து வளர்ப்பதற்கு கலை பண்பாட்டுத் துறை சார்பாகவும், பிற அரசு துறை / தனியார் அமைப்புகளுடன் இணைந்து தமிழகம் முழுவதும் கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.1.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்”. அதன்அடிப்படையில் 2017–2018 ஆம் நிதியாண்டில் கலை நிகழ்ச்சிகள் வழங்கிய **தஞ்சாவூர் காவேரி அன்னை கலை மன்றம், திருச்சிராப்பள்ளி மாவட்ட நாடக நடிகர்கள் சங்கம், தஞ்சாவூர் பிரகன் நாட்டியாஞ்சலி அறக்கட்டளை மற்றும் சென்னை நாத இன்பம் பொது அறக்கட்டளை,** ஆகிய நான்கு கலை நிறுவனங்களுக்கு தலா ரூ.1.00 இலட்சத்திற்கான காசோலைகள் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழர் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் அவர்களால் 9.5.2018 இன்று சென்னை எழும்பூர், கலை பண்பாட்டு இயக்ககத்தில் நடைபெற்ற விழாவில் வழங்கப்பட்டது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**